தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உள | திருவள்ளுவர் யாண்டு ககஅஉ கர—ஆடி 1951—ஜூலை | மலர் ௪

ஆதீனங்களின் அருட் செயல்கள்.

பண்டைக்காலந் தொட்டே தமிழ் நாட்டு ஆதீனங்கள் மக்கள் உடலுக்கும் உயிருக்கும் ஆக்கந்தரக்கூடிய அருட் செயல்களை மேற்கொண்டு மக்களை நல்வழிப்படுத்தி வந் திருக்கின்றன. இன்னும் விரித்து உரைப்பின் மக்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் உறுதி தரப்பெற்ற வழி களிலே தம் அடியார்களை ஈடுபடச் செய்யவேண்டும் கருத் துடனே ஆதீன முதற்குரவர்கள் ஆதீனங்களை நிறுவினர் என்னலாம். முதற்குரவர் அருட்கருத்தின்படியே அவர் வழிவந்த தலைவர் பெருமான்களும் மக்களை நல்வழிப்படுத்தி அடியார் கூட்டத்தைப் பெருக்கி அறிவுச் செல்வத்தைப் பரவச்செய்து வந்திருக்கின்றனர்.

இந்த நன்முறையில் திருவாவடுதுறைஆதீனமும், தரும புர ஆதீனமும், மக்கட்கு அளித்துள்ள அருட்செயல்கள் நிறைவேறிப் பயன் தருவனவாயின. திருக்குடந்தை நன்னகரில் பொதுமக்கள் அறிவு வளர்ச்சி அடிப்படையா யுள்ள கோபாலராயர் நூல் நிலையப் படிப்பகத்திற்குப்

பொது மக்கள் நன்மையின் பொருட்டு திருவாவடுதுறை ஆதீன நன்கொடையாக ஆதீன 20-ஆவது பட்டத்து அருட்டிரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளிய மன்றம் "அம்பலவாணர் மன்றம்" என்னும் திருப்பெயருடன் 1951, ஜூலை, 3-ஆம் நாள் சென்னை மண்டில முதல் அமைச்சர் மாட்சிமிக்க திருவாளர் P. S. குமாரசாமி ராஜா அவர்களால் திறந்துவைக்கப் பெற்று விளங்குகிறது. அப்பெருமன்றத்தில் ஆதீனத்து 21-ஆவது அருட்செங்கோல் ஆட்சி தாங்கி விளங்கும் அருட்டிரு சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் திருவுருவப் படமும் திறக்கப்பெற்று அருள் பரப்பி வருகின்றது. இந்நாள் நினைவாகவும் அருட்டிரு அம்பலவாணகுரவர் நினைவாகவும் ஆதீன வரலாறுகளை சுருக்கமாக விளக்கும் நினைவு மலர் நூல் ஒன்றும் வெளியிடப் பெற்றது. அதே நாள் மாலை, மாயூரத்துத் தருமையாதீன அருளாட்சிச் செல்வர் அருட்டிரு சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருள்கனிந்து அளித்த பெரியதொரு மகப்பேறு மருத்துவச்சாலையும் சென்னை முதல் அமைச்சர் அவர்களால் திறக்கப் பெற்று பெருநலம் பயந்து வருகின்றது.

திருவருளால் இவ்வாதீனங்களின் அருட்செயல்கள் நாளும் நாளும் பெருகிச் சிறப்பனவாக.

மதிப்புரை.

1. இலங்கைத் தமிழ் விழா மலர் — பக்கம் 216+18. விலை ரூபா 5. கிடைக்குமிடம்: க. நவரத்தினம், சாந்தி நிகேதன், பி. ஏ. தம்பி லேன், யாழ்ப்பாணம், இலங்கை. யாழ்ப்பாணத்தில் ஆறு மாதங்களுக்கு முன் நிகழ்ந்த தமிழ் விழா நினைவு மலராகவும், சர். பொன். இராமநாதன் நூருண்டுவிழா மலராகவும், இலங்கை ஆற்றுப்படையாகவும் ஆக மூன்றில் ஒன்ருகவும், ஒன்றில் மூன்ருகவும் இந்நூல் விளங்குகிறது. 14 கருத்துமிகு கட்டுரைகளும் 42 நற்படங்களும் கொண்ட அழகிய பதிப்பு; நல்லதாள்; கவினுடை அச்சு.

இதிலுள்ள "தமிழ்த்தூதும், தமிழ்ப் பெண்கள் பண்புள்ளமு"ந்தான் இலங்கை மண மின்றிப் பொதுத்தமிழ் மணங்கமழ்கின்றன; ஏனைய கட்டுரைகளெல்லாம் இலங்கையிலுள்ள தமிழர்களின் பண்பாட்டையும், சிறந்தோர்களையும், அவர்தம் தொண்டுகளையும் விளக்கும் இனிய உள்நாட்டு உணர்வுடையன. இதன் முதற்கட்டுரை "இலங்கை யாற்றுப்படை"யெனப் பெயரிடப் பெறினும், "இராமாயண இலங்கை" யெனும் பெயருக்கேற்ப ஆராய்ச்சி அழகுடன் மிளிர்வதால் இந்நூல் முழுவதுமே இலங்கையாற்றுப்படை யெனும் பெயருக்கு உரித்தாய் உணர்ச்சியூற்ருய் விளங்குகிறது. எனவே, பாண்டி, சோழ, சேர நாடுகளின் முன் நிகழ்ந்த தமிழ்ப் பெரு விழாக்களில் அவ்வவ் நாட்டார் செய்யத் தவறிய தொண்டினையும், இனி நடக்கவிருக்கும் பகுதிகளில் புரியக்கூடிய தொண்டினையும் இந்நூல் விளக்கி விளங்குகிற தென்பது ஒருதலை. சிறப்பாய் "இலங்கை நாட்டுப் பாடல்கள்," "இலங்கை முசுலிம்களும் தமிழும்", "மட்டக்களப்புத் தமிழகம்" எனும் கட்டுரைகளில் உணர்ச்சிமிக்க நாட்டுப் பாடல்கள் (folk songs) நல்லிடம் பெற்றிருப்பதுபோல் ஒவ்வொரு வட்டத்தினரும் தம் தம் நாட்டுப் பாடல்களைப் பதிவுசெய்து வைக்க வேண்டிய கடமை யுடையோர் என்பதை இம் மலர் எடுத்துக்காட்டுகின்றது. இம் மலரில் சர். பொன். இராமநாதரது படத்தை முதலிலும் ஏனையவற்றை உரிய இடங்களிலும் அமைத்திருக்கக்கூடும். தன் முனைப்பற்றுத் தொண்டு செய்யவேண்டிய சமய குரவர்களும் தாங்கள் படங்களைத் தாங்களே போட்டுப் போட்டுத் தற்பெருமைக்கும் வீண் செலவிற்கும் ஆளாகி வருவது

போலன்றி இவ் விழாமலர் ஆசிரியர் குழுவும், வினைக்குழு உறுப்பினர்களுந் தங்கள் படங்களைத் தாங்களே போட்டுக் கொள்ளாதிருப்பது போற்றத்தக்கதாகும்.

2. **சச்சபுட வெண்பா:** தருமபுர ஆதீன வெளியீடு-எண் 245, குருபூசை விழா அணிமலராக 56+29 பக்கம், 2 படங்களுடன் கூடி வெளிவந்துள்ள அழகிய பதிப்பாகும். இது 113 வகைத் தாளங்களை விளக்கும் இனிய இசைத் தமிழ்நூல். தாளங்களின் பெயர்கள் தவிர பாடல்கள் யாவும் இனிய தமிழில் இயைந்துள. இது தக்க குறியீடுகள், வேண்டிய அடிக்குறிப்புக்கள், பதிப்புரை, முகவுரை, பாராட்டுரைகளுடன் விளங்குகிறது. தமிழிசைச்சங்கம் முதலிய பொறுப்பாளிகள் செய்ய வேண்டிய தொண்டை இவ்வாதீனம் மேற்கொண்டுளது.

3. **கல்விக் கழகக் கட்டுரை:** புதுச்சேரி கல்விக் கழகத்தின் வெள்ளிவிழா நினைவுமலர்: பக்கம் 351+30: விலை ரூ. 5-8-0. கிடைக்குமிடம்: கல்விக் கழகம், 17, சான்றோர் வீதி, புதுச்சேரி.

54 அரிய கட்டுரைகள் கொண்டது. தமிழ் நாட்டில் தனிப் புகழுடன் வாழும் தமிழ்ப் பேரன்பருட் பெரும்பகுதி தங்கள் தங்கள் உள்ளத் துதித்த உயர் பொருள்களைப் புதுவதாகப் புனைந்துளர். கண்கவர் அச்சும், அரிய கற்றுளும், அழகிய கட்டும், 22 படங்களும இந் நறு மலரை மிளிரச் செய்கின்றன. இது இத்தகைய மலர்களுட் சிறப்புடைய தெனப் பலரால் பலபடப் பாராட்டப்பெற்றுளது. "நமது கழகம்" என்ற தலைப்பின்கீழ் புதுவைத் தமிழ் வளர்ச்சியும், இக்கழகத் தொண்டும் கூறப்படுகின்றன. 'கொல்லைப் புறக் காட்சிகள்' பிரஞ்சு நாட்டு எருதுகளுக்கு உள்ள உடன் பிறப்புணர்வையும் (fraternity) அதனல் விளையும் தற்கொடையையும் (self sacrifice) கண்கலங்கக் காட்டுவதுடன் குடியானவர்களின் பாடற் பயனையும் பண்பாட்டினையும இனிது விளக்குவனவாகும். "வரலாறும் வரலாற் ருசிரியரும்" அந்நாட்டு ஆசிரியர்களின் அரிய அடிப்படைகளை அளந்து கூறுவனவாகும். ஏனைய கட்டுரைகளெல்லாந் தமிழர் பண்பாட்டின் தனி யுயர்வைப் பலபடப் பகர்வன வாகும்.

தமிழ்மணி சாமி. வேலாயுதம் பிள்ளை, பி. எ., எல். டி.

ஆங்காங்கே (7)

திரு. கோ. தியாகராசன், G. M. V. C., தஞ்சை

(1) தமிழ்ச்சொற்களிருக்க பிறமொழிச் சொற்களேன்?

(அ) 'திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்து'
(திருமுருகாற்றுப்படை, 24—25)

இம் மேற்கோளிலுள்ள 'மண்ணுறுத்து' = அலங்கரித்து-மண் = ஒப்பனை = அலங்காரம். (Lexicon)

'மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடும் மண்ணி அமைவர'
(திருமுருகாற்றுப்படை, 226—227)

இம் மேற்கோளிலுள்ள 'மண்ணி' = அலங்கரித்து. எனவே 'மண்ணுதல்' = அலங்காரம் செய்தல்.

(ஆ) பொலம்புரியாடை = பீதாம்பரம்.
(பொலம் = பொன்)

(இ) மினவு = உபசாரம்
மினவுதல் = உபசரித்தல்

(ஈ) வன்கை = வைராக்கியம்

(உ) பல்லியம் = Band music

(ஊ) முறி = இலை. எனவே, பனை ஓலை = முறி ஆகையால், இவ் வோலையில் எழுதப்பட்டுள்ள விலைத்தீட்டு, ஒற்றிலக்கம் (Mortgage Deed)

முதலியன 'முறி' என்னும் பெயர் தாங்கின. பட்டிக் காடுகளில் இச் சொல் இப் பொருளுடன் இன்றும் வழங்குகின்றது. ஆனால், படித்தவர்கள் என்னும் செருக்குள்ள நாம் பிறமொழிச் சொல்லாகிய 'பத்திரம்' என்னும் சொல்லை வழங்குகிறோம். பத்திரம் என்னும் பிறமொழிச் சொல்லிற்கு 'இலை' என்பதே முதற் பொருள். எனவே இவ் வடிப்படைப் பொருளை ஏற்றே 'பத்திரம்' என்னும் சொல் விலைத்தீட்டு முதலியனவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. நம் மொழிச் சொல்லின் கருத்தைப் பிறர் ஏற்று அவர்கள் மொழியில் பயன் படுத்துகிறார்கள் என்பதை அறியாதது இழிவன்றோ! எனவே, முறி=பத்திரம்.

(2) பூமாலைகளுக்குள்ள பல பெயர்களின் விளக்கம்.

நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, மரப்பூ என்னும் நால்வகைப் பூக்களை நூலால் கட்டி அமைப்பது பூமாலை. (இதுபோல் பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு வகைச் சொற்களையும் நூல் என்னும் இலக்கணத்தால் கட்டுவது பாமாலை என்பர். மாலை கட்டுவது என்பது போலப் பாட்டுக் கட்டுவதாகச் சொல்வது வழக்கம்)

(அ) **சரம்**: சரம்=நீர். நீர்த்துளிகள் இடை விட்டு ஒன்றின் பின் ஒன்று விழும் தோற்றத்தைப் போல் பூக்களை இடை விட்டு ஒன்றன் பின் ஒன்றைக் கட்டி அமைப்பது சரம்.

(ஆ) **தொடை**: பூக்கள் ஒன்றை ஒன்று தொட்டுக் கொண்டிருக்கக் (இடைவிடாது) கட்டப்பட்டது தொடை.

(இ) **தார்**: ஆண்கள் அணியும் மாலை=தார்.

(ஈ) **கோதை**: பெண்கள் அணியும் மாலை=கோதை.

(காளியம்மன் அணிவதற்கான கோதை கட்டிய ஆண்டாளுக்குக் 'கோதை' என்னும் பெயர் உண்டு.)

(உ) **கண்ணி**: தலையைச் சுற்றி அணியும் மாலை=கண்ணி.

(ஊ) சூடு : தலையின் உச்சியில் (முடியில்) அணிவது 'சூடு' அல்லது 'சூட்டு'. இக் காரணத்தால் சேவலின் கொண்டையில் பூ போலுள்ள உறுப்பிற்கு 'சூடு' அல்லது 'சூட்டு' என்னும் பெயர் ஏற்றது.

(எ) பொலந்தார் :(பொலம்=பொன்) பொன்னாலாகிய மாலை. இக் காலத்தில் இப் பொருள் 'சருகை மாலை' என்னும் பெயர் தாங்கி வழங்குகிறது. பொலந்தார் என்பதே தமிழ்ச் சொல்.

(ஏ) தெரியல் :(Distinctive emblem of Royalty)

தமிழ் வேந்தர் வேம்பின் பூவையும், ஆத்திப் பூவையும், பனம் பூவையும் மாலைகளாய்ச் செய்து அணிந்தனர். இதனால் இவர்கள் யார் யாரென்று மக்கள் தெரிந்து கொண்டனர். 'விரி' விரியல் என்பது போலத் 'தெரி' தெரியல் என்றமைந் தது போலும்.

மேலே காட்டியது போலச் செம்பொருள் அமைந்த சொற்களிருக்க 'ஹாரம்' என்னும் பிற மொழிச் சொல்லைப் பயன் படுத்தும் தமிழர்களே திருந்துங்கள்.

(3) தமிழ்ச் சொற்களைக் கடன் வாங்கிய தன்றித் தம் மொழிச் சொற்களெனவும் கூறுவது கண்டிக்கத் தக்கது.

(எ. கா.) (1) உலகம் : 'உலகு' தமிழ்ச் சொல்லே. இட வாகு பெயர். 'கதவு' 'அம்' சாரியை பெற்று, கதவம் என்றா னது போல, 'உலகு' 'அம்' சாரியை பெற்று உலகம் என்றா யிற் றென்று வி. கோ. பரிதிமால் கலைஞன் என்னும் ஆசிரியர் கூறுகிறார். உலகம் என்பது தமிழ்ச் சொல்லென்று நச்சினார்க் கினியர் அறைவதாகவும் கூறுகிறார். நிற்க, நான் ஒரு கருத்துக் கூறுகின்றேன், இது ஏற்குமா என்று புலவர்கள் ஆராய்க.

உல=காய். இப் பகுதியை ஏற்றே 'உலர்', 'உலப்பு' என்னும் சொற்கள் உள்ளன. (முற்றும் காய்ந்தன செத்தனவே. எனவே, உலப்பு=சாக்காடு)

இப் பொருளை ஏற்று ஞாலத்தின் காய்ந்த பகுதி உலகம் எனவும், நீருள்ள பகுதி நீரகம் எனவும் பெயர் பெற்றன. (from உல to உலகம் just as கல to கலகம்)

(2) 1950 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் புது டெல்லியில் வெளி வந்த நாட் செய்தித் தாளில் (Daily news paper) P. S. சாத்திரி என்பவர் ஒரு கட்டுரை வெளியிட்டார். அக் கட்டுரையில் பல திராவிட மொழிச் சொற்களை வடமொழி ஏற்றதெனக் கூறியுள்ளார். அவ்வாறான சொற்களில் அகத்தியன் என்னும் சிறப்புப் பெயரும் ஒன்று. பண்டைக் காலத்தில் தமிழர் தங்களில் சிறந்த புலவர்களுக்குக் காரணப் பெயர்கள் கொடுத்திருப்பது வெளிப்படை. அப் பெயர்களில் சில :—

பொய்கையார், காக்கை பாடினியர், பக்குடுக்கை, நன் கண்ணியர் என்பன.

இது போலவே நம் பண்டைத் தமிழ் இலக்கியத்தின் பண்பை (Internal structure) நன்கு ஆராய்ந்து இலக்கணம் வகுத்த ஆசிரியருக்கு 'அகத்தியன்' எனப் பெயரிட்டனர் போலும். நம் மொழியின் அகத்து இயலை அறிந்தவன் அகத்தியன். (புலவர்கள் ஆராய்க).

(4) பிற மொழிச் சொற்களுக் கேற்ற தமிழ்ச் சொற்கள்.

(1) ஒலியல் :—ஈ, கொசு முதலியனவற்றை அடித் தகற்றுவதற்காகக் கம்பிகளாற் செய்யப்பட்ட ஒரு தட்டைக் கருவியை ஆங்கிலேயர் வைத்திருப்பதைக் கண்டுள்ளேன். இதற்கு 'Fly Swatter' என்று பெயர். இக் காரணத்திற் காகவே ஒரு கருவி தமிழ் நாட்டில் இருந்தது. இதன் பெயர் ஒலியல். இச் சொல் சொல்விளக்கத்தில் (Dictionary) உளது. எனவே 'Fly Swatter'=ஒலியல்.

(2) Biology = உயிர்க் கலை

(3) Agricultural Science = பயிர்க் கலை

(4) Ornithology = புட்கலை (புள் + கலை)

(5) Geology = மட்கலை (மண் + கலை)

(6) Home Science = இல்லக் கலை

(7) Ethnology = மக்கட் கலை

(8) Gynocology = மக்கட் பெறு கலை

(9) Independence = தன்னியக்கம்

(10) Freedom = தன்னியல்

(11) Goverment = கொற்றம் (See Tamil Lexicon)

(12) Goverment Servant = கொற்ற ஊழியர்

(13) Administration = ஆட்சி

(14) கடியாரம் = மணி காட்டி

(15) Proof (in printing) = திருத்துப்படி

(16) Toilet Soap = வழலை, சவுக்காரம் என்னும் சொல்லைத் துணி துவைப்பதற்குப் பயன் படுத்துவதைக் குறிக்கவும், வழலை எனும் சொல்லை உடலைத் தூய்மை செய்வதற்குப் பயன் படுத்துவதைக் குறிக்கவும் சொல்வது சிறக்கும்.

(17) Pork = வல்லூரம் (See Tamil Lexicon)

(5) பழஞ் சொற்களுக்குப் புதுப் பொருள்கள்.

(1) புழை ஊசி=நம் உடலினுள் மருந்தைச் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் புழையுள்ள ஊசி. மூட்டைகளில் உள்ள கூலங்களைத் தோண்டிப் பார்ப்பதற்காகப் பயன்படுத்தும் குத்தூசி போலவும், முன்னுளில்லாததும் ஆங்கிலேயருக்குப் பின் இந் நாட்டிற்கு வந்ததுமானதும் ஒரு புறம் குண்டுள்ளதுமான ஊசியை நம் முன்னோர் குண்டூசி என்றது போலவும் இவ் வகை யமைந்த சொல் புழை ஊசி.

(2) துன்னி=தையல் வேலை செய்யும் பொறி (Sewing-machine) துன்=நெருக்கு, தை.

'பொன்செய் கொல்லரு நன்கலந் தருநருந்
துன்ன காரரும் தோலின் துன்னரும்'
(சிலம்பு. இந்திர விழா, வரி, 31, 32)

மேற் காட்டிய வரிகளில் துன்னகாரர்=தையற் காரர்; தோலின் துன்னர்=தோல் தைப்போர், ஆகையால் துன்னி=தைக்கும் பொறி என்று பொருள் கொள்வது ஏற்கும்.

(3) கொக்கி ஊசி=(Safety pin). இவ் வூசியின் ஒரு புறத்தில் கொக்கி உளதால் இப் பெயர் ஏற்கும்.

(4) களரி=(Factory). ஒரு பொருளைக் கொண்டு ஒரு பொருளோ பல பொருள்களோ செய்யப்படும் தொழிற் சாலைகளை ஆலை என்றும், பல பொருள்களைக் கொண்டு ஒரு பொருளோ பல பொருள்களோ செய்யப்படும் தொழிற் சாலையை களரி என்றும் பெயர் கொடுப்பது ஏற்கும்.

இவற்றைப் புலவர்கள் ஆராய்வார்களாக.

நீத்தல் விண்ணப்பம்

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

செந் நெறிச் செலவுடைய மெய்யடியார்களது உடலத்தை இறை இலமாகப் பெற்று வெளிப்படும் தன்மையால் விளையும் பேரின்பத்தையும், அப் பேரின்பத்தைப் பெறச் செய்யும் உலகப் பற்றொழிவினையும் முறைப் பட விளக்கும் பகுதி, திருவாசகத்து நீத்தல் விண்ணப்பமாகும். திருச் சதகம் நுவலும் பொருட்டோடு இயைபு கொண்ட நீத்தல் விண்ணப்பத்து ஓரைம்பது பாக்கள் சொற்றொடர்பு கொண்டமைந்த தாதலின், இப் பகுதி 'செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே' என்ற இலக்கணத்தின் இயற்கை நெறியினையும் மாட்சியினையும் புலப் படுத்தி. மெய்யுணர்வின் நலத்தைப் பயந்தளிக்கும் பான்மையது. நஞ்சனைய அறியாமை எனும் இருளைச் சிவம் பெருக்கும் அறிவுக் கனலால் மாற்றி, மெய்ப் பொருளைக் கண்டு கொள்ளும் யோக வொருமையின் கடைப் பாகத்தில், ஆற்றல், அறிவு, இன்பம் எல்லாவற்றையும் தம் முட் கொண்டு வெளிப்படும் இறைவனும் கடையவனுக்கு, மணிவாசகர், ஆர்வமும் அன்புங் கொண்டு, தம்மை யீந்து, தம் தனிமை தீர, அறிவு இச்சை செயல் முதலியவற்றை மலர்த்தி உரிமை யாக்கலை உணர்த்தும் பகுதி 'கடையவனேனை' எனத் தொடங்கி, 'கடையவனே' என அந்தாதித் தொடையால் முடிபு தேற்றும் இயலமைப்பு சற்று உணரற் பாற்று. மற்றும், ஞான யோகத்தின் முடி நிலைப் பேற்றின் கண், ஆற்றலனைத்தும் கொண்ட பேராற்றலும், அறிவனைத்துங் கொண்ட அரும் பெருஞ் சோதியும், இன்பமனைத்துங் கொண்ட பேரின்பமும், கடையாகத் தம்முளே இயங்கக் கொண்டு ஆனந்த சோதியாய்த் தோன்றும் உருவுடைய இறைவனை 'கடையவனே' என விதந்து விளங்கியிருக்கும் நிலையினது நுட்பம், நீத்தல் விண்ணப்பத்திற்கு அடுத்து வரும் திருவெம்பாவையில் முதற் கண்ணே 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி' என்ற சொற்றொடரில் விறிப் புலனுதல், திருவாசகப் பாக்களின் வைப்பு முறையின் இயைபினை வகை யுறுத்தி நோக்கும்

வழியானும் எளிதில் விளங்கா நிற்கும். ஆதிக் கண்ணே பல்லுயிர்களைத் தோற்றுவித்து எல்லா வுயிருமாய்த் தழைத்தும் பின் அவ் வுயிர்களுக்கு அல்லையாய் மாய்ப்ப நிற்கும் கடையவர் எவரோ, அவர் தாமே மீண்டும் தோற்றுவிக்க வேண்டு மென்பதை நிலை நிறுத்த 'ஆதி' யென்ற சொல்லைத் திருவெம்பாவையில் மணிவாசகர் பெய்து வைத்த அருமை அறிதற் பாலது. 'அந்த மாதி என்மனார் புலவர்' என்பது சிவ ஞான போதம்.

சொல்லுதற் கரிய அந்தமாகி, யாவர்க்கும் மேலாகி நின்று சீரோடு பொலிவான் பால் மாணிக்கவாசகர் 'யாவர்க்கும் கீழாம் அடியேன்' என்ற தாழ் வெனும் தன்மையால், யாவரும் பெற்றறியா இன்பத்துள் தழைத்து நிற்கும் அக வுணர்வின் உரை விளக்கமே மணிவாசகரது கவிதை. இறை முன் அன்பொடுருகி அகங் குழைந்து தற் போத மிழந்து நின்ற அரு நிலையிலே தவழ்ந் தெழும் இவரது அருட் கவிதை, இவரது மணி வாக்கின் அழகை வளர்த்து, அதனை ஆன்ம வுணர்வில் மலர்ந் தொழுகும் இன்பத் தேன் பொழிவாகப் பொலியச் செய்கின்றது. இறை யுணர்வைத் தூண்ட வல்ல இக் கவிதை உள் ளொருமை யொன்றினல் அனுபவிக்க இயலுமாதலான், இது அந்தக் கரணத்துக்குரிய ஒப்பற்ற நாத விருந்தாகும். மற்றும் ஆன்ம சித்தியினையும், மெய்ஞ் ஞானச் சக்தியினை யும் புலப் படுத்தித் தெய்வக் கலையினை வளர்த்தே வாழ்வை உயர்த்தும் எழிலுடையது. இதனுன் நீத்தல் விண்ணப் பத்துப் பாக்களில் படிந்த மனம் திருவருட் கிலக்காகி நெகிழ்ந்து விரிந்து இன்பானுபவத்தால் ஞானத்தில் திளைத்து அமைதியுறு மென்பதினைக் கருத் திருத்துதல் வேண்டும். எனவே மணிவாசகரின் கவிதை பொருளுடைக் கலையுடைய அம்பலவாணரது யாழிசை யாகும். செவி மடுத்த அளவில் இஃதொன்றே உள்ளுணர்வுடையார் நெஞ்சகத்தே பல நெகிழ்ச்சிகளை எழுப்பும் தகைமைத்து.

இறையினின்றும் பிரிவுணர்ச்சி கொண்ட மனம் மீண்டும் அறியாமை அறிந்து இறைவனை உன்னுந்தோறு முள்ள ஆன்ம சுதந்திரத்தின் உள்ளத் துடிப்பினையும் பக்திக் காதலையும் புலப்படுத்தி மிழற்றுதற் கேற்ப இசை தழீஇச் செல்லும் நீத்தல் விண்ணப்பத்துப் பாக்களோ,

நினையுந் தோறும் உணர்வுடையார் நெஞ்சத்தில் விழுமிய இலக்கியச் சுவையினை நனி சொட்டும் தேனிருலாக விளங்குவதினுன், ஓரைம்பது பொங்குகள் கொண்ட ஞான மலர்த் தேனிருலை அதன் யோகப் பொலிவி னியல்பிற் கண்டு, சுவையினை நுகர்ந்தும், தேர்ந்தும் இன்ப மார்ந்தும் மகிழ்தலே, புலனும் மனனும் மாட்சிமையுற வேண்டுவார்: சாலவும் விரும்பற் பாலதாகும். இதன்கண், மனோ தத்துவம், மாயா தத்துவம், ஆன்ம தத்துவம், யோகப் பொலிவின் நுட்ப வியலாற்றல், அதனில் உறவாடும் உள்ளன்பு, ஊற்றமான மெய்ஞ் ஞானச் சுவை, உலகிய லறம் விளக்கும் அனுபவ சைவ உண்மைகளின் ஒளி முதலியன இலக்கிய நலத்தால் ஒற்றுமைப்பட்டு வயங்குவதினுன், மெய்ம்மையும் அறமும் நுவலும் நீத்தல் விண்ணப்பம், ஞானப் பகுதி சிறந்த மங்கலத் தகுதியினை எய்துவ தாயிற்று. இத்தகைய அளப்பரிய பெரு மாட்சித் தான நீத்தல் விண்ணப்பத்தில், உலக வாழ்க்கையின் பற்றொழிவு நிலையே முத்தி யாதலின், அம் முத்தியினைக் கருதும் வெற்றி யுணர்ச்சியின் ஒலி முகிழ்த்து துன்பத்தில் துடித்துக் கொழுந் தோடிப் பொலிவதை மணிவாசகர் திறவிதாய் விழுப்பங் காணத் தெருட்டியும், உயிரனுபவ நிலையும் அருளனுபவ நிலையும் வகுத்து, உயிரனுபவ முற்றினுல் இயல்பாய் அருளனுபவ முறும் நெறியினையும் துலக்கியு மிருத்தல், மக்க ளனைவரும் நன்குணர்ந்து தெளிவும் செவ்வியும் தேர்ந்து மகிழ்தற் பாலதாகும்.

கண்டு களிப்பதாலாய கடவுட் களிப்பு உண்டாகும் அருள்நிலை விழுப்பத்துத் துறையின்கண், நீத்தல் விண்ணப்பத்துப் பாக்கள் யாவும் நம்மை நாட்டமுறச் செய்து நமது வாழ்வைத் தெய்வ வொளி நாடும் யோக நிலையினில் புகுத்தும் செம்மை நலமுடையன. எடுத்துக் காட்டாக,

> கடலினுள் நாய்நக்கி யாங்குன் கருணைக் கடலின் உள்ளம்
> விடலரியேனை, விடுதிகண்டாய், விடல் இல்லடியார்
> உடல்இலமே. மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே!
> மடலின்மட்டே! மணியே! அமுதே! யென்மது வெள்ளமே!

எனும் செய்யுளை ஒரு தலையாய் ஓர்ந்துணரின் வீடுபேற்றிற்குக் காரணமாய் ஞான யோகத்தின் மறைபொருளும் மெய்யுணரும் ஆறும், துறையும் இசைவாகவும் இனிமை

யாகவும் புலப்படும். கூர்ந்து சிந்திக்கின், இச் செய்யுள் இறை நிலையினை அறிவிக்கும் செப்பங் கொண்டு, வழங்கும் கிளர்ச்சியும் இன்பமும் மிகப் பெரிது. சற்று அப் பாவின் செவ்விய திறம் மிகும் சொற்களின் போக்கும் ஓசையும் பெருமிதமும் நோக்க அதனினிமை தெளிவாம். மற்றும் அது தீங்கனி யனைய இலக்கியச் சுவை மிகுந்து இயற்கை அழகும் புலவர்களும் புலன் கொளற்கரிய கருத்துகளும் கொண்டுள்ளது. எங்கும் விராஅய் விளங்கி ஒள் ளொளி ததும்பும் மெய்ப் பொருளி னிருப்பினை அப் பாவில் காணலாம். காண, கதிரை மறைக்குஞ் சோதி துண் ணென நம் முளத்தில் நிலைபெறும் உணர்வு உண்டாகிறது. அலைகடல் நீரின் சுவையின் தன்மையினை அறியாத நாய், நீர் வேட்கை தணியக் கடலை அணுக, தெண்ணீர் அலைகள் கரை மீது மோதுதலான் பயந்து, பருகாது போவது போல், இறைவனது கருணைக் கடலின் சுவையினை அறிந்து அதனில் திளைத்துந் தேக்கியும் பருகியும் மனஞ் செலுத்தி யும் உருகாது நின்ற வெறுமையன் யான் என்பது தோன்ற 'கடலினுள் நாய் நக்கி யாங்குன் கருணைக் கடலின் உள்ளம் விடலரியேனை' என்றுர் மணிவாசகர். பொய்யாய உலகத் தின் கரையில், இவரது இதயம் தனது அலைகளைக் கொண்டு மோதுதலும், உகும் கண்ணீரோடு அக் கரையில் அவரது இதயம் 'என் உயிர்த் தலைவா! காதலால் கலந்து ஆண்டு கொள்' என உள்ளத் துடிப்புடன் இறைவனுக்கு முற்றி லும் தம்மை யூணுக்கும் தகைமையினை உணர்த்தும் வகை யும் புலப்படும். இதனுன் இதய வேகங்களை இறைவன் பால் திருப்பி மனத்திலும் புத்தியிலும் ஞானக் கதிர்களை உளப் பெற்று உய்யும் வகையுடைய ஞான யோகத்தி னியல்பும், துறவின் வழி இறைவனுக்கு யார் தம்மை அழுதும் தொழுதும் அளிப்பரோ, அன்னவருக்குத் தன்னையே இறைவன் அளிக்கும் உண்மைத் தெளிவும் கண்டு கொள்ளலாம். இறை ஆணையாலே கடலின் மோனத்தின் அலைகள் அடித்து வீசினும், மீண்டும் நிறை குறைவற்ற நெடுங் கடல் அமைதி யுறும் கருணையின் பெருமையினைக் கண்ட மணிவாசகர் இறைவனது கருணைக் கடலுக்குள் தம துள்ளத்தை விழைவுடன் நுழைத்துச் செலுத்த அருமையான தம்மை இறை இட மாகக் கொண்டார் எனக் கூறியது சிந்திக்கற் பாற்று.

நீத்தல் விண்ணப்பத்தில் பெரும்பான்மையான பாடல்களிலெல்லாம், தையலாரது மையலிலும், காமச் சூழலிலும் பட்டு அக் கொள்ளையில் சிக்கும்படியாய உடலையுடையரா யிருந்தும், 'இறைவா! நீ எனக்குள் இடம் பெற்றாய்' எனக் கூறி உலக வாழ்வினின்றும் விடுதலைப் பெறும் லயத்தை உணர்த்திய அடிகள், ஈண்டுக் குற்றமற்ற அடியார்கள் உடலிலே குடியாக் கொண்டு நிலை பெற்றிருக்கும் இறைவனது நிறைந்த தன்மையினையும் பெருமையினையும் அனுபவ வாயிலாகத் தேர்ந்து, 'உத்தரகோசமங்கை' யெனு மிடம் குற்ற மற்ற அடியார் உடலி லிருப்ப தென அறிவு வகையான் குறிப்பிட்டது யோக நெறியின் கண் பழகுவார் தாம் ஓர்ந்து கொள்வர். பிரணவ மலையில் மனதையும் பார்வையும் வைத்து சாலன மெனும் வுத்தியினைப் புரிந்தால், நம் முடலகத்தே வடகிழக்குத் திசையின் கண் சிவன் தோன்றி இன்பங் கொடுப்பா னென்பது அன்னவர் தம் சீரிய உள்ளக் கருத்து. 'உத்தரகோச மங்கை' யென்பது அடியாருடலகத்தின் உள்ளே யுள்ள இட மெனத் தோன்றுமாறு 'விரும்பும் அடியாருள்ளத் துள்ளாய் மன்னு முத்தர கோச மங்கை' எனவும், 'உத்தர கோச மங்கையு ளிருந்து வித்தக வேடங் காட்டிய இயல்பும்' எனவும் அடிகள் கூறியுள்ளது ஈண்டு அறிதற் பாலது. உயிர்களுய்ய முத்தி முழு முதலாம் இறைவன் வடகிழக்குத் திசையில் திருக் கூத் தியற்றுவது கன்னி மூலையிலுள்ள உமையைக் காண்பதற்காக ஆய தத்துவ உட் பொருளைக் கொண்டு 'உத்தரகோசமங்கை' யெனும் பெயர் அமைக்கப்பட்டது. ஞான சித்தி நிறைந்த யோகியர் தமது காட்சிப் புலமையால் வடித்த இத் தகைய தத்துவ நுட்பத்தினை உள்ளவாறு நுனித் தறிந்தால் நம் மன நிலை முதிர்ந்து பழுக்கு மென்பதில் ஐயமில்லை. இவ்வாறு உடலில் சிவத்தை நாத சத்தியோடு வடகிழக்கு மூலையில் நிலைக்கச் செய்து, திறவிலே காணின், சிவன் நீங்காது என்றும் இன்பத்தை அளிப்பா னென்பது 'பண்ணின் மொழியாளோடுத்தர கோச மங்கை மன்னிக், கழியா திருந்தவனைக் காண்' எனப் பண்டாய நான் மறை. பகர்வதால் விளங்கும். எனவே உத்தர கோச மங்கை என்பது வீடு பெறுதற்குரிய மெய்யடியா ருடலில் இருக்கும் இட மென்பதைக் குறித்தல் பெருவரவிற் றுதலும் உணர்க.

கட்கினியதொரு பரம்பொருளை உடலகத்தே ஞான வினைகளின் வழி நினைந்து உருகி உருகி ஆற்றுணுந்தோறும் கண்களினின்றும் ஆனந்த நீர் பொழிதல் இயற்கையாகும். கண் மலர்கள் நோவாமே அழுது அழுது, கண்ணகத்தே நின்று களி தரும் இறைவனைப் பெறலாமே என்ற உர னூக்கங் கொண்ட அடிகள் இறையை 'என் மது வெள்ளமே' என மன மலர்ந்து சிலிர் சிலிர்த்து உரைக்கும் பான்மையை நுணுகி ஆயின், மடல், மணி, அமுது முதலிய வற்றை மணிவாசகர் தம்மினின்றும் பிரித்துத் தனியாய்க் கூறினரல்லர் என்பதறிக. இப் பாட்டின் கண், இறை, உயிர், இயற்கை ஆகிய முப்பொருளுண்மையினை உரைக்க வந்த அடிகள், யோக முதிர்வு காலத்தில், உணர்வான் விழியை நாடிய வழி, கண்களிலிருந்து இயல்பாக இழி தரும் நீரினையே, 'மட்டே, அமுதே, மது வெள்ளமே' என எழிலுற இசைப்பாராயினர். தத்துவ ஆராய்ச்சியில் கட்டுப் படாதும் சொல்லும் பொருளும் இறந்த நிலையி லுடைய இறைவனை இவ்வாறு கூறுவது இயற்கைக்குப் பொருத்தமே. எனவே 'மடலின் மட்டே' என்பது என் கண் மடல்களில் இழி தரும் நீரென்பதும், 'மணியே' யென்பது என் கண்ணின் மணியென்பதும், 'அமுதே' என்பது என் கணிலே ஊறும் அமுதம் என்பதும் அறியப் படும். உலகப் பொருள்களைக் கண்டு அறிவும் இன்பமு முறக் கண்மணி இன்றியமையாதது போன்று, தம்மறிவு, மயக்கமும் தியக்கமும் நீங்கிப் பேரின்புறுதற்கு இறைவன் தமக்கு இன்றியமையராகயிருத்தலைப் பற்றி 'மணியே' என்றார் மறை பயின்ற மணிவாசகர். 'என் கணிலே அமு தூறி தித்தித்து என் பிழைக் கிரங்கும்' எனும் அடிகளது வாக்கு ஈண்டு உற்றுணரற் பாற்று. மற்றும் ஞான யோக சாதனத்தால் அருவியாகப் பாயும் கண்ணீரை நெல்லிச் சாறெனக் கொண்டு, அதனைச் சிவ சித்தர் சாவா மருந்து செய்வதற்கு ஏதுவாகும் நீர்மை கருதி அமு தெனச் சிறப்பிக்கப் பட்டது சாலவும் சிந்திக்கற் பாலது.

உலகம் உப்புக் கடல் நீரான் மறை முகமாக வளம் பட்டுப் பயன் படுவது போன்று, உடலமும், இறையன்பி னில் விளைந்த கண்ணீரான் பயன் பட்டு, பொன்னை யழிக் கும் நன் மேனியாக வயங்குவது கண் கூடு. ஒழிவற நிறைந்த யோகத்தில் ஈடுபட்டார் தம் கண் மடலி னின்றும்

வையகப் புலவன் வள்ளுவன்

வேலூர்க் காரழகன்

மண்ணகத்து மிளிரும் மக்களினம் மாண் பெய்தி அறிவியலி லேகி, ஒழுக்கத்தி லழுந்தி, அற இயல் பெற்று மேன்மை எய்தல் பளிங் கொத்த உள்ளம் பெற்ற கவிகளின் நல்லுரைகளா லன்றி வேறில்லை. மேல் புலம் ஹோமராலும், டாண்டேயாலும் ஷேக்ஸ்பியராலும் கவித் துறையில் மேன்மை எய்தி யுள்ளது; கீழ் புலமோ தொல்காப்பியராலும், திருவள்ளுவராலும், காளிதாசராலும், உமர்காயத்தாலும் மேன்மை எய்திற் றெனில் ஏதமில்லை. நலம் நிறைந்த அறத்தால் மக்கள் வாழ்க்கையைப் பண்படுத்திச் செமமையாக்கிச் சீர் பெற வைத்த பெற்றிமை நற்பொருள் நவின்ற உயர் பெருங் கவிகளுக்கே உரியது.

வரும் நீரின தியல்பை, மெய்யன்பராய தாயுமானச் செல்வர், 'விழி நீர் ஆறுக வாராத முத்தியினதா வேச வாசைக் கடற்குள் மூழ்கி' எனக் கூறியது கருதற் குரியது. அளவிலா அன்பு காரணமாக இறைவனைச் சித்தம் குளிரச் சிந்தை செய்யின், கண்களிலிருந்து நீர் கசிந்து பெருகி அடலே மிகு கடலென மறுகுதல் இயற்கை யுண்மை யாதலின், கடல் நீருக்கும் கண்ணீருக்கு முள்ள பொருத்தம் நன்கு விளங்குவதினுன், மணி, அமுது, மது வெள்ளம் முதலியன கண் மலரினைப் பற்றிக் குறிப்பிடுவது பொருத்த மென குறியாகக் கொள்க. இவ்வாறு இறைவனுடன் இரண்டறக் கலக்கும் உயிரினதனுபவத்தைச் சொற் கோவையால் விளக்கும் கலையை உடலாகவும், இறையினை உயிராகவும் கொண்ட மணிவாசகரது கவிதை, நந்தா வளங் குலவும் நீத்தல் விண்ணப்பத்துப் பாக்கள் தோறும் உண்ணின்று, மெய்ப் பொருளாகவும், யோகம் பொழியும் சக்தியாகவும் உணர்வு நினைவுகளுக் கிசைய விளங்குவது புலப்படுவதினுன், அருட் புலமை விரவிய நீத்தல் விண்ணப் பத்துப் பாக்களனைத்தும், அறிவு வகையான் புகுத்தப் படாது உணர்ச்சி வகையான் இன்ப நலச் சீரோடு ஊட்டப் பட்டு மகிழ்தற் குரியவை யென்பது விசிதமாம்.

(தொடரும்)

விழி யிழந்த நல்லிசைப் புலவர் ஹோமர் வரலாற்றையும் நிகழ்ச்சியையும் அடிப்படையாகக் கொள்ளாமல் சிறந்த இலக்கியப் பொலிவுடைய இரு பெரிய காப்பியங்களை வனைந்து உயரிய புகழுட னுலவுகிறார். ஒரு நகர முற்றுகையை விளக்கும் உயரிய கதையைச் சிறந்த முறையில் சித்திரித்து இறவாத் தன்மை எய்தினும் அவை யாவும புரை தீர்ந்த கலையின் முழுமையின் விளைவே. விண்ணுலகில் கடவுள்கள் மது வருந்தி மணந்து மகிழ்ந்து போரிட்ட செய்திகள் தொன்மை கிரேக்க நாகரீகத்தில் காண்கிறோம்; என்றாலும உவமை யற்ற கலையின் கனிவும் இலக்கிய உயர் தனிச் சிறப்பும் கிரேக்கர்களிடத் திருந்தன. கலை இலக்கியச் சீர்மையுடைய கதைகளைக் கொண்ட மக்களைப் போன்றே கடவுள்களை யமைத்தனர். கலைத் துறையிலும் இலக்கியத் துறையிலும் உச்ச நிலை எய்திய கிரேக்க நாட்டு நாகரீகத்தைச் செம்மை யாக்கிய பிளாட்டோ, விருப்பம். உணர்ச்சி, எண்ணம் இவைகளின் கலவையே மனித னென்றும், இம மூன்றுடனும் பொருந்திய தெளிவுடைய மனித வாழ்வுக்கு மெய்யறிவு அல்லது உண்மை யறிதல் வழிகாட்டியா யிருக்க வேண்டு மென்றார். பொதுவாகக் கூறுமிடத்து கலையில் வாழ்வை அமைத்தவர்கள் கிரேக்கர்கள்.

கிரேக்க நாகரிகத்தின் அடிவழி வந்த மாபெருங்கவி டாண்டே, இடைக் காலம் வரை இலக்கிய மில்லாப் பெருங் குறையைக் களைந் தெறிந்து டிவைன் காமெடி என்ற உயரிய ஒப்பற்ற கலையியல் இலக்கியப் பிழமபை யாத்து அதில் கிறித்துவ சமய நெறியின் விண்ணுலக வியல்களை இனிதே இயம்பிப் புலனடுக்கத்தையும், விலங்கியல்பினின்று விலகி வாழ்தலையும், தீங்கு தகைத்துத் தகவுடன் வாழ்தலையும் வற்புறுத்தித், தன்னைப் புறக்கணித்த ஒண்டொடியை வானுலகில் தெய்வீக தேவியாக்கி, நன்மை தீமை என்ற ஆராய்ச்சியி லிறங்கி முடிவு காணாது போயினும், இடை இடையே இன்பக் கலை நற்பொருள் ஊற்றுக்களை ஒளிர வைத்து மன்பதையின் வாழ்வு நலத்திலும் அழகிலும் இருத்தல் வேண்டு மென மொழிகிறார்.

மாபெருங்கவி டாண்டே வழிவந்த ஷேக்ஸ்பியர் ஆங்கிலத்தில் இலக்கியக் கருவூலமா யிலங்கி இவ் வவனியில் எவராலும் போட்டியிட வியலாது அரி ஏறு என்று நிமிர்ந்து நிற்கிறார். உலகை ஊன்றி யறிந்து உலகியலை உள்ளவாறு உரைத்து பாத்திரங்களின் பண்பாடுகளை இயற்கை போல் இயம்பி மதத்தில் தானும சிக்காமல் மற்றவர்களையும் சிக்க வைக்காமல் நிகழ்ச்சிகளுக்கு உரியானவர்கள் பெறும் உணர்சசியைப் படிப்பவர்களும் பெறுமாறு தோற்றுவித்து இறவாத் தன்மை எய்தி இயற்கைபோ லிலங்குகிறார்.

ஓம் புலத்துத் தமிழகத்தைத் துருவி நன்காராய்கையில் தொன்மை நூலாய் நிலவும் தொல்காப்பியம் செறிவும், நிறைவும், செம்மையும், செழுமையும், கலையு மலிந்து, அளவையியலையும் அறிவியலையும இயற்கையையும் துணை கொண்டு உலக வாழ்வியலைப் புரை தீர்ந்த செய்யு ளியலில் கூறுகையில் வினையிலே பற்றப்படாத அறிவனும் முனைவனே இறைவனென்றும், உயிர்க ளறு வகை யென்றும, ஐம் பூதங்களின் கலவை உலக மென்றும கூறி, வாழ்வின் முடிபு இன்பமும் பொருளும அறனும் என் றறுதியிட் டுரைத்தமை போற்றற் குரியது.

தகவுடைய தனிப் பெரும் தமிழ் நாகரீகத்தைக் கலை மலிந்த கனிவுடைய கவியியலில் கூறிய தொல்காப்பியருக்குப் பின்னர் மூவாயிர மாண்டுகளாக, கடல் கோள்களாலும புற அலைகளாலும தமிழகம தாழ்ந்தமையால் தமிழ்க் கலைப் பரிதிக்கு ஒளி மறைவு (கிரகணம்) ஏற்பட்டது. தமிழ்க் கலைக் கேற்பட்ட இயம்பொணு இன்னலை இரிக்க, தொல்காப்பியரின் பொன்னுரைகளாகிய இன்பம், பொருள், அறம் ஆகிய இம் மூன்றையும் அறம், பொருள், இன்பம் என மாற்றி, பிளாட்டோ கிரேக்க நாகரீகத்தைச் செப்பமாக்கியதைப் போன்று, வான்புகழ் வள்ளுவர் பேரிலக்கியம் யாத்து இடைக் காலத்து ஏற்பட்ட மாசை மாய்த்து தமிழ் நாகரீகத்தைத் துலங்க வைத்தார். வள்ளுவரின் உயர்வு உலகில் உயர்ந்து பரவுவதைக் கண்டவர்கள் வள்ளுவர் தனித்த முறையில் உலகுக் குரைக்காது கௌடல்யரின் கருத்துக்களைத் தமிழ் மெருகிட்டு மொழிந்தார் என்னும் பேதையரு மில்லாம லில்லை; வரலாற்றுக் கண்கொண்டு ஆராய்கையில் வள்ளுவரின் காலம் கி. மு. 31; ஆனால் கௌடல்யரின் காலம் கி. பி. 300 என்று ஆசிரியர் A. B. கீத் கூறியிருப்பதைக் கூர்ந்து கவனிப்பின் நலம் மிகப் பயக்கும்.

ஹோமரின் இலக்கியம் கலையின் செழுமையாகச் சிறந்து விளங்குகிறது; டாண்டேவின் இலக்கியம், முதிர்ந்த வாழ்வைச் சுவை மலிந்த முறையில் விளக்குகிறது; ஷேக்ஸ்பியரின் நாடகங்களோ, பாத்திரங்களின் பண்புகளை உணர்ச்சியுடன் விளக்குகின்றன; உமர்காயம் என்ற நல்லிசைப் புலவர் வாழ்வியலை விளக்குகையில் உள்ளம் கொந்தளிக்குமாறு விளக்குகிறார். மேல் புலத்து ஹோமரும், டாண்டேயும், ஷேக்ஸ்பியரும் கலையில் வாழ்வை யமைத்தார்கள். ஆனால் தென் தமிழ்த் தொல்காப்பியரும் வான் புகழ் வள்ளுவரும் வாழ்வில் கலையை யமைத்து இன்பமே முடிந்த முடிபென் றுரைத்து, திண்மை இன்பமே நுண்மை இன்பத்திற் கழைத்தேகு மென்றனர்.

'அறம்புரி சுற்றமொடு சிறந்தது பயிற்றல் இறந்ததன் கடனே' என்று தொல்காப்பியனாரும், 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ப வன் வானுறையும தெய்வத்துள் வைக்கப்படும்' என்று வள்ளுவ னாரும்கூறியிருத்தல் பொருத்தமாக விளங்குவதுடன், வாழ்விலே கலை இன்பம் உண்டு என்பதை அமைத்து விளக்கியவர்கள் தொல்காப்பியரும் வள்ளுவருமே என்பதில் ஐயமில்லை.

டாண்டே தன் வாழ்வி லெய்திய அவலத்தைச் சித்திரிக் கையில் சிற்சில விடங்களில் கற்பனையில் தோற்றுவித்த பாத்திரங்களின் பண்புகளைப் பகர்கையில் ஒரு சில அறங்களை யறைந்தார்; இருநூற்று நாற்பது பாத்திரங்களின் பண்புகளை ஷேக்ஸ்பியர் பகருங் காலை இடம், காலம், நிலை, இவைகளுக் கேற்ப உலகியற் கூறுகளை யுரைக்கையில் சில அறங்களை அறைந்தார். ஆனால் வான் புகழ் வள்ளுவரோ யாவர்க்கும் அப்பாற்பட்டு, பாத்திரங்களையும், நிகழ்ச்சிகளையும் கையாளா மல் என்றும், எந் நாட்டுக்கும், ஏற்புடைத்த மாற்றமில்லா பண்பாட்டின் மீது அறங்களை நிறுவி உலகியலை வரையறுத்து முடிந்த முடிபுகளைக் கட்டி மதவாதிகளும் மாயாவாதிகளும் பகைமையின்றிப் பாரில் வாழச் சிறந்த சமுதாய வாழ்வியலை யமைத்து அதில் ஆண்டவனியலையும், அரசியலையும், காதலியலை யும் திகழ வைத்துள்ளார். ஏனைய இயல்களும் அறத்தினின்று அருமபி அன்பால் பேணப்பட்டு பண்பில் முடிதல் வேண்டு மென்று வள்ளுவர் உரைத்துள்ளார். கடவுளை முன்னிறுத்தி அற இலக்கியம் வனைந்த வள்ளுவர் கடவுளின் பண்புகளைக் கூறுகையில், பிற நாட்டுக் கடவுள்கள் குடித்து, மணந்து, போரிட்டதைப் போலல்லாமல், சிறந்த பண்புகளின் அறிவியல் பிழம்பே கடவு ளென்றார்.

அவா பிறப்புக்கு வித் தென்றும் உயிர் அன்பின் வழி என் றும் பிறப்பின் நோக்கம் பிறருக்குத் தொண்டு புரித லென்றும் கூறி உலகியலை வற்புறுத்தி யுள்ளார். ஆண் பெண்ணுடனும் பெண் ஆணுடனும் அன்பை அடிப் படையாகக் கொண்டு ஒழுக்கத்தைக் கடைப் பிடித்து இல்லற மலர் வனத்தில் மகிழ்ந்து திகழ்தலே தலையாய அற மென்று துளக்க மற விளக்கி வற் புறுத்தி யுள்ளார்; துறவை அறவே தகையாது அதற்குரிய நல்லிடம் நல்கி, துறவுக்கும் இல் வாழ்வுக்கும் போட்டி யமைத்து இல்வாழ் வினிதே நடாத்தின் விண்ணுலகில் தெய்வத்துடன் வைக்கப்படுவ ரென்றும்; துறவிகள் விண்ணுலகம் புகுவ ரென்றும் கூறியுள்ளார். 'வைக்கப்படுவர்', 'புகுவர்', என்ற இரு சொற்களையும நன் காராயப் புகின், 'வைக்கப்படுவர்' என்ற சொல் 'புகுவர்' என்ற சொல்லினும் மேன்மை யுடைத்

தாதலின் இல்லறமே சிறந்த தென்பதும் ஆணும் பெண்ணும் ஒன்றி வாழ்தலே உயர்வுடைத் தென்பதும் கூறுமலே விளங்கும்.

மனைவி மாண்புடையவளாக வாய்க்கப் பெறின் குறை வின்றி நிறை வெய்தியமை யாகு மென முழக்கி, ஐம்புலனு மொருங்கே இன்பம் நுகர்வது ஒப்பற்ற ஒண் டொடி யிட மென்றதுடன், பூங்கோதையிடம் பெறும் புல னின்பம் தாமரைக் கண்ணு னுலகில் பெறு மின்பத்தினும் மேலான இன்ப மென இயம்பி, விண்ணுலக இன்பத்தினும் மண்ணுலகில் மங்கை யிடம் பெறு மின்பமே உயர்வுடைத் தென்றுரைத்து உலகியலே இன்ப மலர்வன மாக்கி மன்பதை மகிழ்வுடன் வாழ வாழ்வியலே யமைத்த வள்ளுவரின் உயர்வுக் கீடுண்டோ?

பெர்ஷிய நாட்டுப் பெருங் கவி உமர்காயம், ருபாயத் என்ற சீர்மையுடைய இலக்கியத்தில், 'மர நிழலிலே மணி நூலும், மது நிரம்பிய கிண்ணமும், ரொட்டித் துண்டும், என் காதலி! என்னருகே கனிந்து பாடின் வனாந்தரமும் வானுலக மாகாதோ' என்று கூறி வனாந்தரத்தை வானுலக மாக்கும் பெற்றிமை பாவையரிடத்துளது என்று பகர்கிறார்.

ஷேக்ஸ்பியரோ, உலகை அரங்காக்கி வாழ்வை எழு பிரிவாக்கி அணங்குடன் வாழ்வது அனல் நிழலிடை வாழ்வதை யொக்கு மென்றார். உலக வாழ்வில் நம்பிக்கையைத் தோற்று வித்து இயற்கை நெறிக்கும் நடை முறைக்கும் ஏற்றவாறு சமுதாயத்தை அமைத்து ஆணும் பெண்ணும் பிணக்க மின்றி பிணைந்து வாழ நன் மொழிகளையும் நல்லறங்களையும் நவின்று நலமுடன் வாழ நல் வழி கோலிய வள்ளுவரின் உயர்வு என்னே?

தனி மனிதனுக்கும் தனி மங்கைக்கும் உரிய பொறுப்புகளை யுணர்த்தி சமுதாயத்திற்குரிய அன்பு, பண்பு, நீதி இன்ன பிற நெறிகளை நன்கு நவின்று சமுதாயத்தைக் காத்து நடாத்தும் அரசியலை நன் கறைந் துள்ளார். சமுதாயத்திற்கே நாட்டுப் பொருள்களென்றும் தனி மனிதனுக் கல்ல வென்றும்; சமுதாயம் சீர் பெற் றுயரத் தனியாகவும் கூட்டாகவும் பாடுபட

வேண்டுமென்றும், தனி ஒருவருக்காகச் சமுதாயம் பாடுபடக்கூடா தென்றும் நன்கு வற்புறுத்தி, பொருளைப் பகிர்ந்து மற்றவர்களுக்கு வழங்கிய பின்னர் தான் பொருளுக்குடையவன் பெற வேண்டு மென்று கூறி யுள்ளார். 'பகுத் துண்டு பல்லுயி ரோம்புதல்' என்ற அறத்தைக் கூறி மக்கள் பட்டினியின்றி அன்பு நெறியில் வாழச் சிறந்த அறத்தைச் சமுதாயத்திற்குக் கூறி யுள்ளார். பொருளைப் பங்கிட் டளித்தல் அரசியலுக் குட்பட்ட தென்றாலும் அதை அரசியலில் கூறாது சமூகத்திற் குரிய சமுதாய இயலில் இயம்பியமை தனிச் சிறப்புடைத்தே. சமூகம் சீர்பட்டால்தான் அரசியல் நிலைக்கும்; சமூகம் சீர்படவில்லை எனில் அரசியல் எவ்வளவு சிறம்புடையதாயினும் உருப்படாது. ஆதலினால் நாட்டிலுள்ள பொருள் சமுதாயத்திற் கென்றே சொல்லி மக்களை உணரவைத்த பிறகுதான் அரசியவில் சட்டம் கொண்டுவந்தால் சமுதாயமும். அரசாங்கமும், நிலவும்; இல்லை எனில் சமூகம் சாய்ந்து அரசியல் அழிந்து உலகம் அவலத்திற்கேகும்.

மக்களுக் கின்றியமையாத நீர் விலைக்கு விற்கப்படவில்லை; நீரை மக்கள் தேவைக்களவே பயன்படுத்துகின்றனர்; அஃதே போன்று பொருள்களையும் மக்கள் தன்னலமின்றி தேவைக் களவு பயன் படுத்தின் தனிஉரிமை தகைந்து பொதுமை பிறங்கு மென்றுணர்ந்தே செல்வம் எல்லாம் குளத்து நீர் போன்ற தென்றார் வள்ளுவர். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இவைகளை அணிகலன்களாகப் பெற்றவர்களே நாடாளத்தகுதி யுடையவ ரென் றுரைத்து, அவர்களறத்தினின்று வழுவாது—அறங்கடந்தவைகளைப் புரியாது, வீரத்தினின்று வீழாது அரசோச்சல் வேண்டுமென்று வள்ளுவர் கட்டளையிட்டு இம்முறையில் ஆளப்பெறுமரசே மானமுடைய தென்றியம்புகிறார். நாடாளவந்தவர்கள் நாட்டிற்கு நலம்நல்கப் பொருள் வருவாய்க் குரிய வழியைக் கண்டு, அவ்வண்ணமே பொருளை ஈட்டி, ஈட்டிய பொருளைக் காத்து, காத்த பொருளை மக்களுக்கு நலமுற வழங்கல் வேண்டு மென்கிறார். நாடாள வந்தவர்கள் நாட்டிலுள்ள மன்பதைக்குக் கல்வி ஒளி நல்கி, கல்வியறிவால் மக்கள் மேன்மையுறல் வேண்டுமென்றும்; மக்களாய்ப் பிறந்தும் கல்வியறிவு இல்லையேல் விலங்கினத்துடன் வைக்கப்படுவாரென்றும்,

கல்விதான் மக்களை மாண்புற வைக்குமென்றும், கல்விக்கேற்ற அறிவுதான் மக்களுக் குண்டென்றும் கூறி, மக்கள் கல்வியறிவு பெறுவதே அரசியலாரின் முதற்பணி என உணர்த்துகிறார்.

நாட்டை நலமுற வைக்கும் அரசியல் தலைவர்கள் இயல்பாகவே பெற்ற பேரறிவுடன் நூலறிவும் பெற்றது, நாட்டில் பசியே இல்லாமலும், பகைமையே வளராமலும் ஆளவேண்டுமென அறுதியிட்டுக் கூறுகிறார். மேகத்தைத் தடுத்து மழை பொழிய வைத்து, காட்டைத் தன்னகத்தே கொண்டு விலங்கினங்களையும் வாழவைத்து, விலையுயர்ந்த மாணிக்கங்களை உற்பத்திசெய்து நன்மையை நல்கும் மலைகளும் மழையாலும், ஊற்றாலும் வளமுறவைக்கும் இருபுனலும், நாட்டில் பாயும் ஆறுகளும், ஒரு நாட்டிற்கு உறுப்பென உரைக்கின்றார்.

தனிப்பட்டவர்களுக்குரிய அறத்தையும் சமுதாயத்திற்குரிய அறத்தையும் அறைந்த வள்ளுவர் நீதி, பண்பு, அறிவு நிரம்பிய நல்லார்களே நாடாளவேண்டுமென்றும் பொருள் சமுதாயத்திற்கே இருத்தல் வேண்டுமென்றும் சிறந்த அரசியலை அவனிக்கு அளித்த வள்ளுவரின் உயர்வுக் கீடுண்டோ !

இறைவனையும் வினையையும் பல பிறப்புக்களையும் நம்பியவர்கள் ஊழுக்கிரையானார்களேயன்றி ஊழை எதிர்த்தார்களில்லை. வள்ளுவர் அம் மூன்றையும் நம்பினாலும் ஊழுக்கிரையாகாமல் ஊழை எதிர்க்கும் பெற்றியராகவே விளங்குகிறார். சூழ்தலில் வீற்றிருப்பவரை ஊழ்வெல்லுமென்றும், உஞற்றுபவர் ஊழை வெல்லுவரென்றும் கூறி முயற்சிக்கு முதன்மை நல்கி, மக்கள் ஊக்கமுடன் ஓங்கிவாழ உயரிய துறையைத் தொன்மைக் காலத்தே தகவுடன் நல்கிய சால்புக்கு ஈடுண்டோ!

பற்றுடையது உயிர் என்றும், பற்றற்றது பரம்பொருளென்றும், பற்று அற—பற்றுடைய உயிர்—பற்றற்றதைப் பற்றுமாறு பகர்ந்து பரம்பொருளை எய்தவழிகோலிய வள்ளுவர் பேரா இயற்கை நிலையை எய்த அவா நீக்குமாறு அறைந்ததின் நுணுக்கம் பாராட்டற்குரியதே. பற்றற்றான்—பேரா இயற்கை என்ற இரு சொற்களையுமாராய்ந்து பார்க்குமிடத்து மதவாதி

களும் மாயாவாதிகளும் மோதிக்கொள்ளாதிருக்கவே அவ்வாறு கூறியுள்ளார் போலும். உலகில் மக்களினமுள்ளவரை முடிவு காணாது என்றும் ஆராய்ந்த வண்ணமே இருக்கவைத்த கூறிய நுண்மைக்கு என்ன கூறவியலும்? சமயத்துறையில் நின்று வள்ளுவரின் சமயநிலையை நன்காரயப்புகின் ஓரளவு இவர் தழுவிய சமயத்திற் குடன்பாட்டைத் தெரிவிக்காது தமக் குடன்பாடில்லாச் சமயங்களைச் சிறந்த முறையில் செப்பும் சிறப்புக்கு உலகிலேயே உவமையில்லை.

புத்தர்களுக்கு ஐம்பூதங்கள் உடன்பாடில்லை...; "பூதங்கள் ஐந்தும் நகும்" என்று வள்ளுவர் கூறியுள்ளதால் வள்ளுவர் புத்தமதத்தைச் சார்ந்தவரல்லர்; இறைவனே உலகைத் தோற்றுவித்தான் என்ற கொள்கை சமணர்களுக்குடன்பாடில்லை;...... "பரந்து கெடுக உலகியற்றியான்," என்று வள்ளுவர் கூறியதால் இறைவன் உலகை உண்டாக்கினான் என்று திட்டமாகத் தெரிவதால் வள்ளுவர் சமணரல்லர். மேலும் பொதுவாக அகத்திணையை அழிப்பவர்கள் சமணர்களும் புத்தர்களும் என்பது உலகமறிந்த உண்மை; ஆனால் இல்லறத்திலிருப்பவர்களுக்கு வீடுபேறு வலிந்து கிடைக்குமென்று வள்ளுவர் கூறியிருப்பதால் வள்ளுவர் சமண சமயத்தையும் புத்த சமயத்தையும் சார்ந்தவரல்லர்; உயிர்கள் பல அல்லவென்றும் ஒரே உயிரென்றும்—உயிரே கடவுளென்றும்—கடவுளே உயிரென்றும் கூறும் கொள்கையினருக்கு வள்ளுவர் உடன்பாடுடையவரல்லர், கடவுளைப் பற்றற்றான் என்று கூறுவதால் கடவுள் ஒன்று உண்டு என்பதும்—'பல்லுயிர் ஓம்பல்' என்றதால் உயிர்கள் பலவென்பதும் நன்கு தெரிவதால் ஷெ கொள்கைகளுக்கும் வள்ளுவருக்கும் ஒரு தொடர்புமில்லை. 'தனக்குவமை இல்லாதான்' என்று இறைவனைப்பற்றிக் கூறிய வள்ளுவர் இன்பத்தின் உவமையாக 'தாமரைக்கண்ணான் உலகு' என்றமையால் வள்ளுவர் வைணவரல்லர். சமணத்திற்கும்—பௌத்தத்திற்கும்—வேதாந்தத்திற்கும்—வைணவத்திற்கும் வள்ளுவர் உடன்படாதவர் என்பது தேற்றமாயினும், தன் சமயத்தைக் கூறாமல் சைவத்திற்கும் எதிர்மறையாக இல்லாமலிருப்பதால் வள்ளுவர் சைவரே.

வள்ளுவரின் நூலமைப்பு முறையில் முதல் நான்கதிகாரங்களின் சிறப்புமுறை அனைவரையுமாழச் சிந்திக்கத்தூண்டுகிறது. அனைத்திற்கும் மூலமாயுள்ள முழுமுதற் கடவுளையும், அதற்கடுத்து மக்களினம்—விலங்கினம்—செடிகொடி இனம் வாழ்வதற்கு இன்றியமையாத மழையையும், உணவு பெற்றுய்யும் மக்கள் ஒழுக்க நெறியில் நின்று உயர் வெய்திய துறவிகளின் பெருமையையும், பின்னர் அறம்பற்றி வாழ்தற்குரிய அற இயலையும் இனிதே அமைத்துள்ளார். மக்களாய்த் திகழ்ந்தாலும் அறம்பற்றி வாழ்தல் வேண்டுமென்றும் அறம்பற்றி வாழ்வதால் தூய ஒழுக்கம்பெற்றுப் பெரியாராய் விளங்கி, பின்னர் மாசு மாய மாய. தூய்மை பெருக, பெருக—மேகம் தூய்மை எய்தி மேல் செல்லுவதைப்போன்று—மேலேகி இறுதியில் கடவுளடி எய்த வள்ளுவரின் பாயிரம் பகர்கிறது. மாசு இருக்கும் வரை உயரவியலாதென்றும் மாசு மாய்ந்ததும் இலேசாகி மேல்கிளம்பவியலுமென்றும் மேலும் மிகத்தூய்மை எய்தின் மிகமேலான இடமெய்தவியலுமென்று மறியக்கிடக்கிறோம். மக்கள் அறம்பற்றின் தூய ஒழுக்கமெய்துவரெனறும் தூய ஒழுக்கமெய்தியவர் இலேசாகி மழையைப்போல் மேலேகுவரென்றும் அதனினும் தூய்மை எய்தின் அனைத்திற்குமப்பாற் பட்ட முழு முதற் கடவுளடி எய்த வியலுமென்றும் பாயிர அமைப்பு முறையி லமைத்து மக்கள் வாழ்வதற்குரிய முறையை நன் கமைத்த வள்ளுவரின் சிறப்பு என்னே!

காரல் மார்க்ஸ் என்ற பேரறிஞர் பொருள் வாழ்வுக்கின்றி யமையாத தென்றும் பொருளில்லையேல் வாழ்வு வீழ்ச்சியுற்று அவல முறுமென்றும் பல அரிய ஆராய்ச்சிகள் செய்து பொருள் மீதே சமுதாய அரசியலை அமைத்து பொருளுக்கும் உயிருக்கு முள்ள தொடர்பை விளக்கியுள்ளார். வள்ளுவர் பொருளின் இன்றியமையாமையை நன்குணர்ந்து வறுமையால் பல துன்பங்கள் தோன்று மென்றும், பொருளில்லை யெனின் ஈன்ற தாயும் பிறன் எனச் சொல்லுவா ளென்றும்; நெருப்பை விட வறுமை மிகக் கொடி தென்றும் கூறி நாட்டில் உடையவர்களுக்கும் அற்றவர்களுக்கும் போர் நிகழாதிருப்பான் வேண்டி, கொல்லாமை என்ற தலைப்பிலே உணவைப் பகிர்ந்து கொடுத்த

பின்னரே உரியவர்கள் உண்ண வேண்டுமென்று கூறியுள்ளார். இம் முறையை மக்கள் விரும்பி நடை முறைக்குக் கொணரின் வர்க்க மற்ற சமூகம் தோன்றுமென்பதைக் கூறவும் வேண்டுமோ?

இறைவன், காதல், பொருள், அரசியல், சமுதாயம் ஆகிய இவைகளைக் கூறி உலகிலுள்ள பல துறைகளை நன்கறிந்து, வாழ்வியலைச் சிறந்த புரை தீர்ந்த செய்யுளியலில் சித்திரித்துக் கொடுத்து, பல பக்கங்களில் விளக்கும் பெரிய கருத்துக்களை மிகச் சுருக்கமாகச் சிறு சொற்களிலே எழிற் கலையுடன் கூறி; உடலுக் கின்றியமையாத உயிரையும், உடலுக்கும் உயிருக்கும் இன்றி யமையாத மழையையும் ஒப்பற்ற காதலுக் குவமையாக்கி, கனிந்த காதல் வாழ்வே வாழ் வென்றும், அச் காதல் வாழ்விலே காணும் இன்பமே கலை என்றுமியம்பி வாழ்வில் கலையை யமைத்து, அறிவுடையார் எல்லாம் உடையவர் என் றறைந்து அருங் குறளை அகரத்திற் றொடங்கி, னகர இறுதியில் முடித்து இறவாப் புக ழெய்தித் திகழும் வையகப் புலவர் வள்ளுவர் வாழ்க.

யாழ் நூல்

பேராசிரியர் விபுலானந்த அடிகளார், பதினான் காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது. தோற்றம் பொலிந்தது.
விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.